# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04–ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் .44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **கணேசன்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**04.08.2025 OS.67/2021 வா.சா.1 ஆஜர்**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன் . எனது தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து பின்பு அதில் நான் கையொப்பம் செய்தேன். பிரமான வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

தாவா பிராதுடன் மாதிரி வரைபடம் அசல் ஒன்றை தாக்கல் செய்கிறேன் . **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 14.06.2018ம் தேதியிட்ட வாதி தந்தை பெயரில் ஏற்பட்ட பட்டா எண்கள் .2588–க்கான சிட்டாவை தாக்கல் செய்கிறேன் . **அது வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 07.02.2020ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் ஆவண எண் .422/2020–ன் படி ஏற்படுத்திக் கொண்ட மேற்படி ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன் . **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது .** 2 முதல் 5 பிரதிவாதிகள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட விடுதலை ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் . **அது வா .சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது .** கடந்த 20.03.2020ம் தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவின் சார்வு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன் . **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 15.07.2021ம் தேதியிட்ட தாவா சொத்தின் பட்டா எண் .2716 ஆகும். மேற்படி பட்டாவின் இணையவழி பதிவிறக்க நகலை தாக்கல் செய்கிறேன் . **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது .** பிரதிவாதி பெயரில் உள்ள தாவா சொத்தினை ஒட்டிய பகுதிக்கான பட்டா இணையவழி பதிவிறக்க நகலை தாக்கல் செய்கிறேன் . **அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்தின் பட்டா எண் .2716க்கு வாதியால் செலுத்தப்பட்ட கிஸ்தி வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன் . **அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 22.03.2021ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி மீது பழையனூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு சமூக பதிவேட்டு ரசீது CSR ரசீது எண் .29/2021–ஐ அசல் தாக்கல் செய்கிறேன் . **அது வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது .** கடந்த 11.08.2021 மற்றும் 27.08.2021 அன்றும் தாவா சொத்தின் நான்குமாலில் உள்ள திரு .மகேந்திரன் என்பவருக்கு கொடுக்கப்பட்ட அறிவிப்புகளின் சார்பு நகல்களை தாக்கல் செய்கிறேன் . **அது வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது .** 1ம் பிரதிவாதி மாவட்ட பதிவாளார் அலுவலகத்தில் கொடுத்த புகாரின் பேரில் வாதிக்கு வந்த அழைப்பாணையின் சார்பு நகலை தாக்கல் செய்கிறேன் . **அது வா .சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது .** தாவா சொத்தின் புகைப்படம் மற்றும் குறுந்தகடு அசல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.14 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது .** 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள மின் இணைப்பிற்கான ரசீது பதிவிறக்க நகலை தாக்கல் செய்கிறேன் . **அது வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்கிறேன் . **அது நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.நீதிமன்ற ஆணையர் வரைபடம் தாக்கல் செய்கிறேன் . **அது நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிராதுபடி தீர்ப்பு செய்ய பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam